செ.வெ.எண்:52/மே நாள்:28.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## அனைத்துத் அரசுத்துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ள பணிகள் மற்றும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து

## மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வு மேற்கொண்டார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (28.05.2016) நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், அனைத்து அரசுத் துறை அலுவலர்களின் பணிகளை ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் பேசுகையில்:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொதுமக்கள் நலனை மேம்படுத்திடும் விதமாக எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் அனைத்து அரசுத் துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத் திட்டங்கள் குறித்தும், செயல்படுத்தப்பட்டுள்ள மற்றும் முன்னேற்றத்திலுள்ள பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளும் விதமாக இந்த ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, மின்சாரத்துறை, சமூக நலத்துறை, வேளாண்மைத்துறை, பொது சுகாதாரத்துறை, கல்வித்துறை, விளையாட்டுத்துறை, குடிநீர் வடிகால் வாரியம், நகராட்சி மற்றும் பேரூராட்சிகள், வனத்துறை, தொழில்துறை, தாட்கோ, கால்நடை பராமரிப்புத்துறை, ஆவின், கூட்டுறவுத்துறை, மீன்வளத்துறை, வேலைவாய்ப்புத்துறை, தொழிலாளர், பொதுநலத்துறை, போக்குவரத்துத் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் பணிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு பொதுமக்கள் நலனுக்காக செயல்படுத்தி வரும் திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களுக்கு சிரமமின்றி பெற்று பயனடைய ஏதுவாக கொண்டு சேர்ப்பது ஒவ்வொரு அரசுத்துறை அலுவலர்களின் கடமையாகும். எனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையில் செயல்படும் தமிழக அரசு செயல்படுத்தி வரும் மக்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் அனைத்தையும் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் பணியாற்றி வேண்டுமென மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் பேசினார்.

முன்னதாக, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் மருத்துவ சிகிச்சைப்பெற்ற ஒரு பயனாளிக்கு ரூ.2 இலட்சத்திற்கான காசோலையினையும், இடி, மின்னல் தாக்கி மரணமடைந்த நபரின் கணவரிடத்தில் பேரிடர் மேலாண்மை நிதியுதவி திட்டத்தின் கீழ் நிவாரண தொகையாக ரூ.4 இலட்சம் பெறுவதற்கான உத்தரவினையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில் இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் திரு.அ.அன்வர்ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.முத்தையா (பரமக்குடி), திரு.கருணாஸ் (திருவாடானை), மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலிஅக்பர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் திரு.மு.சுந்தரபாண்டியன், கூட்டுறவு நிலவள வங்கித் தலைவர் திரு.தர்மர் உட்பட அனைத்துத் துறை அரசு அலுவலர்கள், நகராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**